156

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்வி முதுமாணி பட்டப்படிப்பு- 2023/2024

இறுதிப்பரீட்சை – 2023/2024

**STP9812- கல்வியின் சமூக மற்றும் தத்துவ அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

**திகதி:- 15.08.2024** நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

பகுதி – I

1. **i.** சமூகமயமாக்கல் என்ற எண்ணக்கருவினை சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்துக.

(05 புள்ளிகள்)

**ii.** முதன்மையான சமூகமயமாக்கல் முகவராக குடும்பத்தின் வகிபங்கில் உள்ள வேறுபாடுகளை குடும்ப வகைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு விமர்சன ரீதியாக விளக்குக.

(10 புள்ளிகள்)

**iii.** பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் சமூகப் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றைக் குறைப்பதற்கு ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்குக.

(10 புள்ளிகள்)

2. **i.** கல்வி தொடர்பான **மூன்று** (03) சமூக செயற்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

**ii.** இலங்கையில் இடைநிலைக் கல்வியை வேலை உலகத்துடன் இணைக்கும் முயற்சியாக பதின்மூன்று வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வியை மதிப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

**iii.** இலங்கையில் வேலையில்லா பிரச்சினையினை குறைப்பதற்கு கல்வி முறைமையில் செய்ய வேண்டிய மாற்றங்கள் **ஐந்தினை** (05) பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

3. **i.** சமூக மாற்றத்தின் முகவராக கல்வியின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(05 புள்ளிகள்)

**ii.** சமூக பெயர்வு என்பதனை வரைவிலக்கணப்படுத்தி இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கு சமூக பெயர்வினை அடைவதற்கு கல்வி உதவுகின்றதா என்பதனை ஆராய்க.

(10 புள்ளிகள்)

**iii.** அனைவருக்கும் சமமான கல்வியை வழங்குவதில் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் **ஐந்தினைக்** (05) குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றை குறைப்பதற்கு கையாளக்கூடிய உபாயங்களை பரீட்சிக்குக.

(10 புள்ளிகள்)

**i.** கல்வி மற்றும் தத்துவம் என்ற எண்ணக்கருக்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** கல்வியின் நோக்கங்கள் தொடர்பாக கீழைத்தேய மற்றும் மேலைத்தேய மெய்யியலாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஒப்பிட்டு கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை மாணவர்களிடையே விழுமியத்தினை மேம்படுத்த ஆசிரியர்களால் மேற்கொள்ளக் கூடிய **ஐந்து** (05) வழிமுறைகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

5. **i.** அரசியல் சமூகமயமாக்கல் என்றால் என்ன? என்பதனை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** கல்வி மற்றும் மானிட விருத்திக்கும் இடையிலான தொடர்பினை உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் கீழ் வர்க்க மாணவர்கள் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) கல்விப் பிரச்சினைகளை ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

6. **i.** சமகால கல்வி முறை பற்றி ஜோன் டூயியினால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** அனுபவ ரீதியான (Authentic Teaching Method) கற்பித்தல் முறையை செயற்படுத்துவதில் ஜோன் டூயியின் கற்பித்தல் முறைகளின் பொருந்தக்கூடிய தன்மைகளை பரீட்சிக்குக.

**(10 புள்ளிகள்)**

**iii.** இன்றைய வகுப்பறையில் மேற்கூறிய கற்பித்தல் முறைகளை பயன்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) சவால்களைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றை குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

- **முழுப்பதிப்புரிமையுடையது** -